[1990 மார்ச் 19

காரணத்தால் அப்படிக் காலதாமதம் ஆகியிருக்கின்ற நேர்வுகள் எவையெவை என்பது குறித்து அரசுக்கு அவர்கள் தெரிவிப்பார் களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வழி வகை உண்டு.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 50 வயதுக்குள் அந்த மாதிரி ரிட்டையர் ஆனால்தான் வாரிசுகளுக்கு வேலை என்று இருக்கிறது. அந்த முறையிலே வேலை செய்ய முடியாதவர்கள், பெர்மனன்ட் டிஸ்எபிலிட்டீஸ் என்று 55 வயதுவரை ஆனவர்கள் சொன்னால், அவர்களுடைய வாரிசுகளுக்கும் வேலை கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இது 'மருத்துவத் தகுதியின் அடிப்படையில்' என்பதற்குத்தான் 50 வயது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை இதில் எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், எந்தத் துறையில் ஓய்வு பெறுகிறார்களோ அந்தத் துறையிலேதான் வேலை கொடுப்பது என்ற முறையில் இருக்கிறது. அதை மாற்றி, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, எந்தத் துறையிலே வேண்டுமானாலும் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர் களே, அந்தத் துறையிலேதான் அவர்களுக்குத் தர இயலும் என்றாலும்கூட, அவர்களுக்குத் தகுதியில்லாத துறையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதென்பது இயலாத காரியம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உயர்நிலைப் பள்ளிகளில் புவியியல் பாடம்.

*5199—திரு. செங்கை சிவம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு பட்டம் பெற்ற ஆசிரியர்களை வைத்துப் புவியியல் பாடம் நடத்துவது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1990 மார்ச் 19]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டு உள்ளது.

அறிக்கை.

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு பட்டம் பெற்ற ஆசிரியர்களை வைத்துப் புவியியல் பாடம் நடத்துவது பற்றி அரசுக்குத் தெரியும்.

(ஆ) அதை மாற்றி அமைப்பதற்கான தேவை பின்வரும் காரணத்தினால் எழவில்லை:

கல்வித்துறையில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு மற்றும் புவியியல் பாட போதனை, பட்டப்படிப்பில் வரலாறு முதன்மைப் பாடமாக எடுத்துப் பயின்ற பட்டதாரி ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வருகிறது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான புவியியல் பாடத்திட்டம், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ளது போல் விரிவானது இல்லை. எனவே, இப்பாட போதனைக்கு ஒரு வாரத்தில் அளிக்கப்படும் கால அளவு குறைவானதாக (ஒரு வகுப்பிற்கு ஒரு வாரத்திற்கு 4 பாட வேளைகள்) உள்ளது. இந்நிலையில் புவியியல் பாட போதனைக்காக சிறப்பாசிரியர்கள் (Specialised Teachers) தேவை ஏற்படவில்லை. எனவே, பட்டப்படிப்பில் புவியியல் பாடத்தை முதன்மைப்பாடமாக படித்த பள்ளி உதவி ஆசிரியர்களை இப்பாட போதனைக்கெனத் தனியாக நியமிக்க இயலாது. மேலும் இத்தகைய ஆசிரியர்கள் மிகக்குறைவான எண்ணிக்கையில்தான் உள்ளனர். எனவே வரலாறு மற்றும் புவியியல் பாட போதனைக்கெனத் தனித்தனியாக ஆசிரியர்கள் நியமிப்பது தேவையில்லையெனக் கருதப்படுகிறது. அவ்வாறு நியமித்தால் அவர்களுக்குரிய பாடபோதனைக் கால அளவு மிகக்குறைவானதாக இருக்கும். இவர்களது ஆசிரியப்பணியை விதிகளின்படி ஒரு ஆசிரியருக்கு ஒதுக்கப்படும் பாடபோதனைக் கால அளவிற்கு முழுமையாகப் பயன்படுத்த இயலாது.

மேலும் புவியியல் பாடம் போதிக்கப் போதுமான எண்ணிக்கையில் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாததால் தற்போது வரலாறு போதிக்கின்ற வரலாறு பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தினால் பணியிடை பயிற்சி மூலம் புவியியல் பாடப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வரலாறு பட்டப்படிப்பு படித்த ஆசிரியர்கள் புவியியல் பாடத்தையும் நடத்தத் தகுதி பெற்றுள்ளவர்களாகின்றனர். இவர்களைக் கொண்டு புவியியல் பாடபோதனை நடத்தப்படுவதால் இதுவரை எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. மாணவர்கள் நல்லமுறையில் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

வரலாறு பட்டம் பெற்ற ஆசிரியர்கள் புவியியல் பாடத்தையும் கற்பித்து வருவது கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் முறையாகும்.

திரு. செங்கை சிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய கல்வித் தரம் உயரும் அளவிலே பி.ஏ., வரலாறு, புவியியல் பட்டம் பெற்ற ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக அமர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, புவியியல் பாடம் பள்ளிகளிலே 4 மணி நேர அளவுக்குத்தான் நடத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தாலும் புவியியல் பாடத்தை நீண்டகாலமாகவே வரலாற்றுத் துறையிலே பட்டம் பெற்றவர்களே நடத்துவது என்பது மரபாக இருப்பதாலும், பி.ஏ. பட்டம் பெற்றவர்களை இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்க முறையில்லாத காரணத்தாலும் — வேண்டுமானால் அவர்களும் விண்ணப்பிக்கலாம், நேரடியாக நியமிக்க வாய்ப்பு இல்லை — இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிற முறை மாணவர்கள் தகுந்த முறையிலே தேர்வு எழுதுவதற்குப் போதுமானதாக இருக்கிற காரணத்தாலும், வேறுவிதமான ஆலோசனைக்கு இப்போது இடமில்லை.

திரு. செங்கை சிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, கணிதம், விஞ்ஞானம் போன்ற சிறப்புப் பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேறிய மாணவர்களுக்கு, அப்பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளித்து, மேலும் அவர்களை மேலைநாடுகளுக்கு அனுப்பி, சிறந்த வல்லுனர்களாக ஆக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலிருந்து அது எழவில்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட நல்ல நோக்கம் உண்டு. செயலாற்றுகிற வாய்ப்பு குறைவு.

(9-10 மணி)

ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்க ஊதியத்தை உயர்த்துதல்

* 5258—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பல்கலைக் கழக மான்யக்குழு வழங்கும் ஊக்க ஊதியம் போன்று, தமிழ்நாடு அரசு ஊக்க ஊதியம் பெறும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்க ஊதியம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS